# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய (திருத்தச்) சட்டம்

---

(1998, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.00 தபாற் செலவு : ரூபா 3.50

# 1998 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஒய்வூதிய (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 12/96

## விதுரர்கள், அநாதைகள் ஒய்வூதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஒய்வூதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப்பெயர்.

2. 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதுரர்கள், அநாதைகள் ஒய்வூதியச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் காப்பு வாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

> "ஆயின், எவ்வாறாயினும், இருபத்தொரு வயதிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட வயது கொண்ட ஆண் அநாதை ஒருவர் அல்லது திருமணம் முடிக்காத பெண் அநாதை ஒருத்தி அவர் அல்லது அவள் தொழில் புரியாதிருக்கும் வரைக்கும், இருபத்தாறு வயதை அவர் எய்தும் வரை ஒய்வூதியத்திற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும்."

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

2 — டீ 049845 — 1,100 (98/09)

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாச ்கு அனுப்பப்பட வேண்டும்.